**செ.வெ.எண்:106/ செப்டம்பர்/2020** **நாள்:30.09.2020**

**திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை ஊராட்சி ஒன்றியத்தில் இரவுக் காவலர் (ஒன்றியத் தலைப்பு) பணியிடத்திற்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு.இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

----------------

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை ஊராட்சி ஒன்றியத்தில் காலியாகவுள்ள இரவுக் காவலர் (ஒன்றியத் தலைப்பு) ஒரு பணியிடத்திற்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. மணப்பாறை ஊராட்சி ஒன்றியத்தில் இரவுக் காவலர் பொது (கல்வித் தகுதி : எழுத படிக்கத் தெரிந்தவர்) பணிக்கான காலிப் பணியிடத்திற்கு நேரடி நியமனம் செய்ய கோவிட்-19 காரணமாக பொது முடக்கம் அமுல்படுத்தப்பட்டதால் விண்ணப்பதாரர்கள் விண்ணப்பம் அளித்திட மேலும் 15 நாட்கள் (01.10.2020 முதல் 15.10.2020 வரை) காலநீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது. எனவே தகுதியானவர்கள் வரும் 15.10.2020 தேதி மாலை 5.45 மணிக்குள் ஆணையர், மணப்பாறை ஊராட்சி ஒன்றிய அலுவலகம், மணப்பாறை 621306 என்ற முகவரிக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

இதில் தாமதமாக பெறப்படும் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது. சாதி வாரியான சுழற்சி முறை கடைப்பிடிக்கப்படும். 01.07.2020 தேதியன்று அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள வயதிற்கு மிகாமல் இருக்க வேண்டும். விண்ணப்பம் வெள்ளைத் தாளில் எழுதி அனுப்ப வேண்டும் அத்துடன் கல்வி தகுதி மற்றும் பணி அனுபவ சான்றிதழ்கள் நகலினை சுயசான்றொப்பம் செய்து இணைத்து அனுப்ப வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு.இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு:**

**உதவி இயக்குநர்,**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,**
**திருச்சிராப்பள்ளி.**